Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 589/2025 PW-6**

Name : சசிக்குமார்
Father / Husband name : சீனுவாசன்
Village : ஒலக்கூர்
Age : 49
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 10.04.2026

Accused present. Defence counsel present. Witness identified by HC 248 Tr.Saravanan.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஒலக்கூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். ஒலக்கூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கலைமணி பதிவு செய்த நிலைய குற்ற எண் 399/2024, U/s 296(b),118(1),351(3) BNS பதிவு செய்த வழக்கினை நான் 23.12.2024 அன்று எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 08.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் சிவக்குமார் மற்றும் சண்முகம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார்செய்தேன். பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 7 மற்றும் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் சம்பவ சாட்சிகளான ஜெயக்குமார், ரேவதி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரியவர எதிரியை தேட எதிரி தலைமறைவாகி இருந்துள்ளார், அவருக்கு தக்க புலன் வைத்து நிலையம் வந்தேன். எதிரி முனுசாமி என்பவர் நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார் என்பது தெரிந்து 01.02.2025 அன்று ஜெயக்குமார் என்பவருக்கு

மருத்துவசிகிச்சை அளித்த உதவி மருத்துவர் சீனிவாசன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று சொற்பக்காயம் என்று காயச்சான்றிதழ் பெற்றேன். பின்னர் அன்றையதினமே சிறப்பு உதவி ஆய்வாளர் கலைமணி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது U/s 296(b),118(1),351(3) BNS ன் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 18.12.2024 அன்று சம்பவம் நடந்ததாக புகாரில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் 4 நாட்கள் காலதாமதமாக 22.12.2024 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் 3 கிமீ தூரம் உள்ளதாக முதல் தகவல் அறிக்கையில் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 புகாரிலும் எனது விசாரணையிலும் மண்பாதையில் சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 மருத்துவமனையில் விவசாய நிலத்தில் சம்பவம் நடந்ததாக கூறியதாக விபத்து பதிவேட்டில் உள்ளது என்றால் சரிதான், நிலத்திற்குள் அந்த மண்சாலை உள்ளது. மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசு, முருகன், சரவணன் ஆகியோர்களின் காலியிடம், வெல்கம் சிட்டி மனைப்பிரிவு உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நிலத்தின் உரிமையாளர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான், சம்பவ சமயத்தில் அங்கு யாரும் இல்லை.

2. பார்வை மகசர் சாட்சி சண்முகம் சிங்கனூர் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். மேற்படி நபருக்கு கோனேரிக்குப்பம், நங்குணம் கிராமத்தலில் வீடு, நிலம் இல்லை என்றால் சரிதான். சாட்சி சிவக்குமார் அ.சா.1 ன் நண்பர் என்றால் தெரியாது. அ.சா.1 தனது புகாரில் பொருள் என்ற இடத்தில் முன்பகை காரணமாக கொலைவெறி தாக்குதல் தாக்கியது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால்

சரிதான். இதனால் எதிரிக்கும் .அசா.1க்கும் முன்பகை உள்ளது தெரியவருகிறது என்றால் சரிதான். அ.சா.1 புகாரில் எதிரி பால்கேனால் தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த பால்கேனை கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எதிரி கைது செய்யவில்லை, அதனால் தடயப்பொருளும் கைப்பற்றவில்லை. அந்த பால்கேன் பிளாஸ்டிக் கேனா, இரும்பு கேனா என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் அ.சா.1க்கும் முன்விரோதம் இருந்ததால் எதிரியை பழிவாங்க பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

3. நான் சம்பவயிடம் சென்று அருகிலிருந்தவர்களை விசாரித்திருந்தால் உண்மை விவரம் தெரியவந்திருக்கும் ஏ்னறால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரி யாரையும் அடிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கினை சரிவர விசாரிக்காமல் எதிரியின் மீது வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.